

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், சின்கோனா தேசிங் குடி மலைவாழ் மக்கள் குடியிருப்பில் நேற்று (14.09.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அப்பகுதி மக்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மக்களை தேடி மருத்துவ முகாம் திட்டத்தின் மூலம், நடமாடும் மருத்துவ முகாம், சிறுநீரக பரிசோதனை நடைபெறுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி பொள்ளாச்சி சார் ஆட்சியர் திருமதி.பிரியங்கா துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு.அருணா, உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.ஐ ஆஷிக் அலி ஆகியோர் உள்ளனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம்

# குறிஞ்சிப்பாடியில் அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பயனாளிகளுக்கு வழங்கினார்!

கடலூர், செப். 15-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ. அருண் தம்புராஜ், முன்னிலையில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், 260 பயனாளிகளுக்கு ரூ.2,64,47,090/- மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு துறைகளின் வாயிலாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வகையில் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் மகளிருக்கு இலவச பேருந்து பயண திட்டம், அரசு பள்ளி மாணவர்களின் நலன் கருதி காலை உணவு வழங்கும் திட்டம், நீரிழிவு நோய், இரத்தகொதிப்பு போன்ற நோய்களுக்கு பொதுமக்களின் இல்லங்களுக்கு சென்று நேரடியாக உதவிடும் வகையில் மக்களை தேடி மருத்துவம் திட்டம், மேலும், அரசு பள்ளிகளில் பயின்ற பெண் குழந்தைகள் தங்கள் உயர் கல்வியை சிரமமின்றி பயிலும் வகையில் புதுமை பெண் திட்டம், போன்ற எண்ணற்ற திட்டங்கள் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து வருகின்ற செப்டம்பர்-15ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் தொடங்கிவைக்கப்பட்டு குடும்ப தலைவிகள் பயன்பெற உள்ளனர் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய்த்துறை சார்பில், முதியோர் மற்றும் இதர உதவித்தொகை 136 பயனாளிகளுக்கு ரூ.24,33,800/- மதிப்பீட்டிலும், வருவாய்த் துறை சார்பில் 13 பயனாளிகளுக்கு பட்டா மாற்றத்திற்கான ஆணை மற்றும் 5 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டையினையும், வேளாண்மை உழவர்நலத் துறை சார்பில் 9 பயனாளிகளுக்கு ரூ.10,740/- மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.41,550/- மதிப்பீட்டிலும், மகளிர் திட்டம் சார்பில் 30 பயனாளிகளுக்கு ரூ.2,20,70,000/- மதிப்பீட்டிலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 22 பயனாளிகளுக்கு ரூ.26,000/- மதிப்பீட்டிலும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.5,25,000/- மதிப்பீட்டிலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 30 பயனாளிகளுக்கு ரூ.13,40,000/- எனஆக மொத்தம் 260 பயனாளிகளுக்கு ரூ.2,64,47,090/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டத்தின் மூலம் சிறப்பு தலையீடு இனத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் முந்திரி சாகுபடி செய்யும் சிறு/குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 50 பயனாளிகளுக்கு ரூ.6000/- மதிப்புள்ள முந்திரி கொட்டை உடைக்கும் இயந்திரம் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மக்களின் குறைகளை போக்குவதற்கு அவர்களின் பகுதிகளிலேயே நேரடியாக சென்று அனைத்து துறைகளிலும் செயல்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது.

இம்முகாமில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், தோட்டக்கலைத்துறை, பள்ளிக் கல்வித்துறை, மகளிர் திட்டம், வாழ்ந்துகாட்டு வோம் திட்டம் போன்ற பல்வேறு துறைசார்ந்த அரசு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்திடும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது, இதுபோன்ற அரசின் திட்டங்களை பொதுமக்கள் அறிந்து பயன் பெற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/ திட்ட இயக்குநர் லி.மதுபாலன், வருவாய் கோட்டாட்சியர் ச.அதியமான் கவியரசு, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) ச.ரமா, வருவாய் வட்டாட்சியர் சே.சுரேஸ் குமார், மாவட்ட கல்விக் குழு தலைவர் வி.சிவக்குமார், தோட்டக்கலை இணை இயக்குநர் எஸ். அருண் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் 1,250 சிறப்பு பேருந்துகள்!

சென்னை, செப். 15-

தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தி மற்றும் வார இறுதி நாள்களை முன்னிட்டு பயணிகள் வசதிக்காக 1,250 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளது.


இது குறித்து தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகம் வெளியிட்ட செய்தி: அதன்படி, வெள்ளிக்கிழமை (செப்.15) சென்னையிலிருந்து தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 650 பேருந்துகளும், சனிக்கிழமை (செப்.16) 200 பேருந்துகளும் இயக்கப்படும்.

மேலும் கோவை, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம் மற்றும் பெங்களூரிலிருந்து தமிழகத்தின் பிற இடங்களுக்கு 400 பேருந்துகள் என மொத்தம் 1,250 சிறப்புப் பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று திங்கள்கிழமை (செப்.18) சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்பும் பயணிகளின் வசதிக்காக தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் தேவைகேற்ப சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளது.

முன்பதிவு செய்யும் பயணிகளின் எண்ணிக்கைகேற்ப தேவைப்பட்டால் மேலும் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# உலகப் பொதுமறைத் தந்தை திருவள்ளுவர் !



உலகில் வேறு எந்த மொழியில் தோன்றிய எத்தகைய சிறந்த நூலும் இவருடைய அற நூலுக்கு இடையே இல்லை என்னும் பெருமையை எய்தியுள்ளார் ஓர் அறிவுப் பெருங்கடல் !

மற்ற மற்ற அறவாணர் அனைவரும் தங்கள் அறநெறிகளை எடுத்துரைக்க நிறைய சொற்களையும் நீண்ட நீண்ட வரிகளையும் பயன்படுத்தியுள்ள நிலையில் ஏழே சொற்களில், ஒன்றே முக்கால் வரியிலேயே தம் அறநெறிகளைப் பாடல் வடிவிலேயே படைத்துள்ளார் அந்த அறிவுப் பெருமழை !

மக்களின் வழிகாட்டிகளாக வந்த மற்ற மாமனிதர்கள், கண்ணுக்குத் தென்படாத கடவுளுக்கே சிறப்பிடம் தந்து, மதத்தை உருவாக்கி, அதன் மூலமே அறநெறிகளைப் பரப்பியுள்ள நிலையில் - கண்ணாரக் காணக்கூடிய இயற்கைக் காட்சிகளின் வாயிலாகவே மனிதரின் நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற நன்னெறிகளை, விழிப்பூட்டும் அழியா விளக்குகளாக ஏற்றிச் சென்றுள்ளார் அந்தப் பகுத்தறிவுச் செங்கதிரோன் !

அவர்தாம்விண்ணைப்போல்விரியும்நுண்ணறிவுக்குத் தாயகமான திருவள்ளுவர் !

- பேரறிஞர் அண்ணா

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

# திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் கழக முப்பெரும் விழா! நல உதவிகள்!

## நிகழ்ச்சி ஏற்பாடு: தி.மு.தனியரசு! கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை செப்.15-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக முப்பெரும் விழா, தி.மு.க.பவள விழா இன்று ( 15.9.2023 ) காலை 10 மணிக்கு பகுதி கழக அலுவலகம் எண் 58, சன்னதி தெரு திருவொற்றியூரில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு திருவொற்றியூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாடு செய்துள்ளார்.

எம்.வி.குமார், ஆர்.எஸ். சம்பத், கே.பிரபாவதி , இரா.குமரேசன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

த.கார்த்திகேயன், டி.சி. வி.மணிகண்டன், எம்.எல். சரவணன்,குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர். சி. ஆசைதம்பி தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் கலந்துகொண்டு பேசுகின்றனர்.

இதில் வீ.கவி கணேசன், வை.ம.அருள்தாசன், குறிஞ்சி எஸ்.கணேசன், எம்.ஆனந்தன், வி.ராமநாதன், டி.ஏ.ராஜ், இரா.முருகேசன், சாந்தி பக்தன், வி. ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சூசிலா ராஜா, பானுமதி சந்தர், எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, டி.டி.எம். பாபு, வி.பழனிவேல், பி. எஸ்.சைலஸ், ஆர்.ரஜினி பாபு, கே.கார்த்திகேயன், ஆர்.டில்லி, ம.ஜெயராமன், ம.எத்திராஜ், அ.அப்துல் சலிம், ப.சந்தான கிருஷ்ணன், மற்றும் வட்ட கழக நிர்வாகிகள்,மாவட்ட, பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

10வது வட்ட செயலாளர் எஸ்.தமிழ்செல்வன் நன்றி கூறுகிறார்.

### இரா.லட்சுமணன் தலைமை!

# ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்!

## தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு!

சென்னை செப்:15

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 114வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (15.09.2023 வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணியளவில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் தலைமையில் என்.அனிபா, ஆர்.டி. ராஜா,கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழகச் செயலாளர் தா.இளையஅருணா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்குகிறார்கள்.

இதில் ஆர்.வெற்றிவீரன், என்.மருதுகணேஷ், வெ.சு. சத்தியநாராயணன்,சி.மணிகண்டன், எ.ரமேஷ்பாபு, இர.பொன்இளவரசன், என். எம்.கதிரேசன், தா.வ.மு. கஜேந்திரன், நா. கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து. ராஜா, வி.வடிவேலு மற்றும் மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக சார்பு மன்ற நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் கேட்டுகொண்டுள்ளார்.

### இரா.துரைராஜ் தந்தை - பொ.இராமசந்திரன் அறக்கட்டளை சார்பில்

# சைதை கிழக்கு பகுதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஆம்னி வேன்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, செப். 15-

சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13வது மண்டலகுழு தலைவர் இரா. துரைராஜின் தந்தை - நினைவில் வாழும் பொ. இராமசந்திரன் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (15.09.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு சைதை கிழக்கு பகுதி 172அ வட்டம் நேரு நகர் நெடுஞ்செழியன் தெரு சைதை கிழக்கு பகுதி அலுவலகம் அருகில் அலங்கரிக்கப்பட்ட அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து நினைவில் வாழும் பொ. இராமசந்திரன் அறக்கட்டளை சார்பில் 1000 பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியும் ஆம்னி வேன் 1ம் நீத்தார் நினைவு ரதம் 1ம் நீத்தார் குளிர் சாதன பெட்டி 2ம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சைதை கிழக்கு பகுதி திமுக வசம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.

மேலும் சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மற்றும் முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

### என்.எம்.கதிரேசன் தலைமை! இரா.லட்சுமணன் முன்னிலை!

# 39வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்! மதிய உணவு!

## தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர் வழங்குகின்றனர்!

சென்னை செப்:15-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39வது வட்ட கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (15.09.2023 வெள்ளிக்கிழமை) பகல் 12 மணியளவில் கண்ணாதெரு,அரசு உயர்நிலை பள்ளி அருகில் இனிப்பு வழங்கியும் உணவு வழங்கியும் கொண்டாடபடுகிறது.

வட்டச் செயலாளர் என்.எம்.கதிரேசன் தலைமையில் பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன், ஆர். வெற்றிவீரன், க.தேவி கதிரேசன் எம்.சி,என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி. சதிஷ்குமார், ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா, கலாநிதி வீராசாமி எம். பி,ஜே.ஜே.எபினேசர் எம். எல்.ஏ ஆகியோர் உணவு வழங்கி விழாவினை சிறப்பிக்கின்றனர்.

இதில் கருணாநிதி, கோபி,சண்முகம், என்.மருதுகனேஷ், பொன்இளவரசன், வெ.சு.சத்தியநாராயணன், சி.மணிகண்டன், தா.வ.மு.கஜேந்திரன், ந. கோதண்டன், ம.நாகராஜ், ச.தமிழ்செல்வன், ப.குமார்,பொ.து.ராஜா, வி.வடிவேல், எஸ்.பி.எஸ்.புத்தன், சண்முகம், எஸ்.கே. இளங்கோ, எஸ்எம்டி.இரவிச்சந்திரன்,டி.கணேசன், பி.அன்பழகன், வி.முத்து, டி.ஆர்.தணிகாசலம், ரமேஷ், திருப்பதிசாமி, வட்ட கழக நிர்வாகிகள் எல்.செல்வமணி, ஜெ.கவுஷ் பாஷா, டிஎல்பி.என்.இரவி, எஸ்.இருசம்மாள், எஸ். துரை, ஜெ.ஜெகன், எ.இப்ராஹிம், எம்.அப்துல்லா, ஜெ.செபஷ்டின், ஜெபகுமார், இ.பிரகாசம்,கே. குமார், எஸ்.கவியரசு, எம். குருமூர்த்தி, கே.எஸ்.குருநாதன், எ.சலாவூதின், பா. ஜெயபால், ஜி.மணிகண்டன், என்.ராஜேந்திரன், பரிமளா,ஆர்.மூர்த்தி, கே.ஜி.சங்கர், இ. பிரேம்குமார், க.ப. சாமி, காஞ்சணா, எ.திருநாவுக்கரசு, டி.யுவராஜ்,எஸ். விஜயா, கே.சதீஷ்,ஆர். ராதிகா, இ.காஞ்சணா, கே.மணி, டி.பஞ்சாட்சரம், எஸ்.சீனிவாசன், சி.முருகேசன், எம்.தயாளன், ஜி. விமலா,எம்.தரணி, கே. ஆசைதம்பி, ஜி.மைக்கேல், எம்,ஆனந்தன்,ராம், மற்றும்கழக நிர்வாகிகள் அனைத்து அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

## ‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!




### ஆர்.கே.நகர் முன்னாள் பகுதிச் செயலாளர்

# சி.என்.இரத்தினம் 4ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!

## தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர், இரா.லட்சுமணன், ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு!

சென்னை செப்: 15-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் முன்னாள் பகுதிச் செயலாளர் சி.என்.இரத்தினம் அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவுஅஞ்சலி நிகழ்ச்சி 12.09.2023 செவ்வாய்க்கிழமை காலை 40வது வட்டம் திருவள்ளுவர் நகர் குடியிருப்பு பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் திருவுருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தபட்டது.

இதில் மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,பகுதிச் செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன்,ஆர்.வெற்றிவீரன், என்.அனிபா, ஆர். டி.ராஜா, கே.பி.சதிஷ்குமார், என்.மருதுகணேஷ், சி.மணிகண்டன், எஸ்.கே. இளங்கோ, பா.கோதண்டன், என்.பிரேமதாசன், எஸ்.கிருஸ்துராஜ், பிராங்களின், எம்.நாகராஜ், என். எம்.கதிரேசன், என்.குமாரி எம்.சி, வெ.சு.சத்தியநாராயணன், எஸ்.எம்.டி.இரவிச்சந்திரன், மூ.சா.அரித்குமார், எஸ்.எம்.முருகன், ஆர்.வெங்கட், பி.பக்தவச்சலம், ஜி.பிரேம்குமார், செல்.ராஜா, எஸ்.துரை, டி.எல்.பி.என்.ரவி, ஏ.டில்லிராஜன்,மகிமை ராஜி,சந்தானராஜ், கு.பாஸ்கர், கே.ஜி.சங்கர், மா.பாஸ்கரன்,ஆர்.கிருஷ்ணன்,ஜீவா நகர் வேலு, ஆவின் ராஜ்குமார்,குப்புசாமி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வட்டச் செயலாளர் நா.கோதண்டன் நன்றி கூறினார்.



தி இந்து தொழிற்சங்க பொதுச்செயலாளர் எம்.கமலநாதன் இல்லத்திருமணத்தில் கழக துணைப் பொதுச்செயலாளரும்,நாடாளுமன்ற குழுதுணைத்தலைவரும், திஇந்து தொழிற்சங்கத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்பி அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் சென்னை மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, சென்னை தென் மேற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் மயிலை வேலுசம்பந்தன், 120 வது வட்டக் கழக செயலாளர் ஐ.சி.எப். எம்.சங்கர். திருவல்லிக்கேணி பகுதி துணை செயலாளர் கே.திருநாவுக்கரசு. நாமக்கல் கே.மோகன்... ஆகியோர் உடனிருந்தனர்.